குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.72/2020

அ.சா. 2

2025–ம் ஆண்டு நவம்பர் 04–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணன் | தொழில் | |
| தந்தை பெயர் | மாரிமுத்து | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.45 மணி,

Accused Govindhan Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. Advocate Mr.Thiyagarajan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் குப்பூரில் குடியிருந்துகொண்டு, சலூன் கடை வைத்துள்ளேன். தருமபுரில் இருந்து சேலம் செல்லும் சாலையில் குப்பூரில் எனது கடை உள்ளது. சுமார் 5 – 6 வருடங்களுக்கு முன்பு, மாலை 05.00 மணியளவில் நான் கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது சாலையில் சத்தம் கேட்டது.

2. நான் சாலையில் பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் தருமபுரி நோக்கி சென்றபோது, அவர்களுக்கு எதிர் திசையில் பள்ளி வாகனம் வந்து திரும்பியபோது, இருசக்கர வாகனம் பள்ளி பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் சாலையில் விழுந்து கிடந்தார்கள். அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது.

3. இருசக்கர வாகனம் மற்றும் பள்ளி பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியாது. மறுநாள் காலை போலிசார் வந்து என்னிடம் விபத்து குறித்து விசாரித்தார்கள். விபத்தினை நான் நேரில் பார்த்தேனா என்று கேட்டார்கள். நான் சம்பவத்தை நடந்து முடித்த பிறகு பார்த்தாக சொன்னேன்.

S
SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.04 17:35:37 +0530

4. விபத்து நடந்த மறுநாள் காலை போலிசார் வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

5. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 20.09.2019 ஆம் தேதி மாலை 04.50 மணியளவில் பிரகாஷ் என்பவர் டி.என்.30 பி.சி.7135 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு, பின்னால் ரிஸ்வான் என்பவரை அமர வைத்துக்கொண்டு, சேலம் – தருமபுரி சாலையில் குப்பூர் பேருந்து நிறுத்தம் தாராபுரம் பிரிவு ரோடு அருகே சேலம் பக்கம் இருந்து தீவட்டிப்பட்டி நோக்கி வந்து கொண்டிருந்தபோது, தருமபுரி – சேலம் சாலையில் தருமபுரி பக்கமிருந்து சேலம் நோக்கி டி.என்.28 எச்.6682 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா என்ற மாதர் வித்யாலயா என்ற பள்ளி வாகனத்தை எதிரி கோவிந்தன் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, திடீரென தாராபுரம் ரோட்டிற்கு செல்வதற்காக சேலம் – தருமபுரி நெடுஞ்சாலையை குறுக்காக கடந்தபோது, பிரகாஷ் மற்றும் ரிஸ்வான் இருவரும் வந்த இருசக்கர வாகனம் பள்ளி வாகனத்தின் பக்கவாட்டு பகுதியில் மோதி விபத்து நடந்ததை நான் நேரில் பார்த்துவிட்டு, அதைத்தொடர்ந்து 21.09.2019 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது அதற்கு சாட்சியாக உடனிருந்து பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு, மேற்கண்ட சங்கதிகளை விசாரணையின் போது கூறிவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.57 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.04 17:35:41 +0530